## 2018 லெந்துகால அனுதின தியானம்
## கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்

தேதி: 5 மார்ச் - லெந்தின் மூன்றாவது வாரத்தின் திங்கள்கிழமை
தலைப்பு: என் அடிகள் உமது பாதையையே பற்றிக்கொண்டிருக்கும்
வேதப்பகுதி: சங்கீதம் 17

1. **கர்த்தாவே**, நியாயத்தைக் கேட்டருளும், என் கூப்பிடுதலைக் கவனியும்; கபடமில்லாத உதடுகளினின்று பிறக்கும் என் விண்ணப்பத்திற்குச் செவிகொடும்.

2. உம்முடைய சந்நிதியிலிருந்து என் நியாயம் வெளிப்படுவதாக; உம்முடைய கண்கள் நியாயமானவைகளை நோக்குவதாக.

3. நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் அதை விசாரித்து, என்னைப் புடமிட்டுப்பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர்; என் வாய் மீறாதபடிக்குத் தீர்மானம் பண்ணினேன்.

4. மனுஷரின் செய்கைகளைக்குறித்து, நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக் கொள்ளுகிறேன்.

5. என் காலடிகள் வழுவாதபடிக்கு, என் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும்.

6. தேவனே, நான் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன், எனக்குச் செவிகொடுக்கிறீர்; என்னிடத்தில் உம்முடைய செவியைச் சாய்த்து, என் வார்த்தையைக் கேட்டருளும்.

7. உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே! உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும்.

8. கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்.

9. என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற என் பிராணப்பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்.

10. அவர்கள் நிணந்துன்னியிருக்கிறார்கள், தங்கள் வாயினால் வீம்பு பேசுகிறார்கள்.

11. நாங்கள் செல்லும் பாதைகளில் இப்பொழுது எங்களை வளைந்துகொண்டார்கள்; எங்களைத் தரையிலே தள்ளும்படி அவர்கள் கண்கள் எங்களை நோக்கிக்கொண்டிருக்கிறது.

## 2018 லெந்துகால அனுதின தியானம்
### கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்

12. பீறுகிறதற்கு ஆவலுள்ள சிங்கத்துக்கும், மறைவிடங்களில் பதிவிருக்கிற பால சிங்கத்துக்கும் ஒப்பாயிருக்கிறார்கள்.

13. **கர்த்தாவே**, நீர் எழுந்திருந்து, அவனுக்கு எதிரிட்டு, அவனை மடங்கடியும்; **கர்த்தாவே**, என் ஆத்துமாவைத் துன்மார்க்கனுடைய கைக்கு உம்முடைய பட்டயத்தினால் தப்புவியும்.

14. மனுஷருடைய கைக்கும், இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலகமக்களின் கைக்கும் உம்முடைய கரத்தினால் என்னைத் தப்புவியும்; அவர்கள் வயிற்றை உமது திரவியத்தினால் நிரப்புகிறீர்; அவர்கள் புத்திரபாக்கியத்தினால் திருப்தியடைந்து, தங்களுக்கு மீதியான பொருளைத் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கிறார்கள்.

15. நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்.

**தியானம்**

சங்கீதக்காரன் இந்த சங்கீதத்தை ஒரு ஜெபமாக அல்லாமல் ஒரு உறுதிப்பாடலாகவே வலியுறுத்தி எழுதுகிறார். அவரது முந்தின நாட்களில் தார்மீக நேர்மை, அறிவார்ந்த நேர்மை, பரிசுத்த வாழ்க்கை மற்றும் வன்முறையற்ற வாழ்க்கை முறைகளை கையாளும் உத்திகள் போன்ற காரியங்களில் கர்த்தருக்கு உறுதியாய் நின்றதை சங்கீதக்காரன் நினைவுகூர்ந்து ஆராய்கிறான். அவர் தனது அடிகளில் தடுமாறவும் அசையாமலும் இருந்தார் என்று சாட்சி கொடுக்கிறார். அவர் நிலையற்ற நிலத்தில் மிதித்ததும் இல்லை நாட்கள் (காலங்கள்) போகிற போக்கில் போனதும் இல்லை. கர்த்தருடைய அழைப்புக்கு செவிசாய்த்து இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவனும், வழிவிலகி போகாதபடி, அவரின் வழிநடத்துதலில் பின்தொடர்ந்து இந்த உலகில் நம் பரம அழைப்பை நிறைவேற்றப் பிரயாசப்படவேண்டும். கர்த்தருடைய வழிகளில் நடந்து நமக்கு முன்சென்ற உண்மையுள்ளவர்களின் முன்மாதிரியை நாம் பின்தொடர்ந்து, இலக்கை நோக்கி ஓடுவோம். அப்போஸ்தலர் பவுல் அடிகள் கொரிந்தியருக்கு, I கொரிந்தியர் 11-ம் அதிகாரம் ஒன்றாவது வசனத்தில் இப்படியாக போதிக்கிறார், "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று.

மார்ட்டின் லூதர் ஒரு முறை பவுல் ஈபெர் என்ற விட்டன்பெர்க் சபை பிரோகிதரிடம், "உமது பெயரும் பவுல் என்பதினால் நாம் பவுலின் போதனைகளை தைரியத்துடன் பற்றிக்கொள்ளுவோம்," என்றார். பண்டைய சீரிய கிறிஸ்தவ

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

நற்செய்தி அங்கம், திருவிருந்தில் பங்குகொள்ளுபவர்களுக்கு இந்த அழகிய கவியை ஒப்புவிக்கிறது:

"நாம் உமது பந்திக்கு வரும்பொழுது நமக்கு முன் சென்றவர்களை நினைவுகூருகிறோம்.

அவர்களின் வாழ்க்கை நமக்கு முன்னுதாரணமாக இருக்கட்டும்.

அவர்களின் போதனைகளை நமக்கு வழிகாட்டியாகட்டும்.

தேவனே இந்த திருவிருந்தை ஆயத்தப்படுத்திருக்கிறீர்.

நீரே எங்களது நம்பிக்கையும் இரட்சிப்புமே..."

சங்கீதக்காரன், "நான் எப்பொழுதும் நீர் காட்டிய வழிகளிலே நடக்கிறேன்" என்று சொன்னதை இந்தக் கவிதைப்பாடல் மிகச் சிறப்பாய் வர்ணித்து காட்டுகிறது.

மனமாற்றமடைந்த நபர் ஒருவர் இவ்வாறு தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொள்கிறார்: ஒரு கட்டத்தில் உலையான சேற்றில் நடந்து கொண்டிருந்தாராம். அவர் அறியாமலேயே தனது மகன் அவரைப் பின்தொடர்ந்துக் கொண்டிருந்தான். அப்பாவின் கால்சுவடுகளில் மகன் கால்வைத்து வந்தான். அப்பா பின்திரும்பி தன்மகனைக் கண்டபோது, அவரது மகன் இப்படியாக கூக்குரலிட்டான், "அப்பா நீங்க மெல்ல நடந்தால் நான் உம்மை விட்டு தூரமாக நடவாமலும் என் அடிகளில் தடுமாறாமலும் இருப்பேனே", என்றான். இவ்வார்த்தைகள் அவரது வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின. அவரது தற்போதைய வழிகளிலே தன் மகன் நடந்தால் அவனை அது தூக்கு மேடைக்குத்தான் கொண்டுசெல்லும் என உணர்வடைந்தார். அவர் தனது மாறுபாடான வழிகளிலிருந்து மாற முடிவு செய்து தன் மகனுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்க முறைப்பட்டார்.

**ஜெபம்**

உண்மையுள்ள தேவனே, இன்றைய தினத்திலே நான் வாழ்க்கையென்னும் பிரயாணத்தை கடந்து செல்லும்போது எனது வழிகளையும், வார்த்தைகளையும் செயல்களையும் காத்துக்கொள்ளும். இந்த சவாலான காலத்தில் நான் உங்களுடன் தங்கியிருக்கும்போதே உமது பிரமாணங்களுக்கு நான் கீழ்ப்படிய என்னை மறுரூபமாக்கிடும்.

**செயல்**

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

நம் வாழ்க்கையில் நாம் எவ்வாறு தவறான முடிவுகள் எடுத்து அவை நம்மை தவறான இடங்களில் நடத்தியது என்று சற்று சிந்தித்துப் பார்ப்போம். சரியானத் தேர்வுகள் செய்ய தீர்மானிப்போம்.

*அருட்திரு மேத்யூ கே புன்னோஸ்*
*பொதுச்செயலர்*
*மலேசியாவின் வேதாகமச் சமுதாயம்*

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

தேதி: 6 மார்ச் - லெந்தின் மூன்றாவது வாரத்தின் செவ்வாய்க்கிழமை
தலைப்பு: இஸ்ரவேல் எப்பிராயீமை மனாசேக்கு முன் வைக்கிறார்
வேதப்பகுதி: ஆதியாகமம் 48:1-20

1. அதற்குப்பின்பு, உம்முடைய தகப்பனாருக்கு வருத்தமாயிருக்கிறது என்று யோசேப்புக்குச் சொல்லப்பட்டது. அப்பொழுது அவன் தன் இரண்டு குமாரராகிய மனாசேயையும் எப்பிராயீமையும் தன்னோடேகூடக் கொண்டுபோனான்.

2. இதோ, உம்முடைய குமாரனாகிய யோசேப்பு உம்மிடத்தில் வந்திருக்கிறார் என்று யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது இஸ்ரவேல் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, கட்டிலின்மேல் உட்கார்ந்தான்.

3. யாக்கோபு யோசேப்பை நோக்கி: சர்வவல்லமையுள்ள தேவன் கானான் தேசத்திலுள்ள லூஸ் என்னும் இடத்தில் எனக்குத் தரிசனமாகி, என்னை ஆசீர்வதித்து:

4. நான் உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி, உன்னைப் பல ஜனக்கூட்டமாக்கி, உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தை நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன் என்று என்னோடே சொன்னார்.

5. நான் உன்னிடத்தில் எகிப்துக்கு வருமுன்னே உனக்கு எகிப்துதேசத்தில் பிறந்த உன் இரண்டு குமாரரும் என்னுடைய குமாரர்; ரூபன் சிமியோன் என்பவர்களைப்போல, எப்பிராயீமும் மனாசேயும் என்னுடையவர்கள்.

6. இவர்களுக்குப்பின், நீ பெறும் பிள்ளைகள் உன்னுடையவர்கள்; அவர்கள் தங்கள் தங்கள் சகோதரருடைய பேரால் அழைக்கப்பட்டு அவர்களுக்குரிய சுதந்தரத்தில் பங்குபெறுவார்கள்.

7. நான் பதானைவிட்டு வருகையில், கானான் தேசத்தில் எப்பிராத்தாவுக்குக் கொஞ்சம் தூரம் இருக்கும்போது, வழியிலே ராகேல் என்னண்டையில் மரணமடைந்தாள்; அவளை அங்கே பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே அடக்கம்பண்ணினேன் என்றான்.

8. இஸ்ரவேல் யோசேப்பின் குமாரரைப் பார்த்து: இவர்கள் யார் என்று கேட்டான்.

9. யோசேப்பு தன் தகப்பனை நோக்கி: இவர்கள் இவ்விடத்தில் தேவன் எனக்கு அருளின குமாரர் என்றான். அப்பொழுது அவன்: நான் அவர்களை ஆசீர்வதிக்கும்படி அவர்களை என் கிட்டக்கொண்டுவா என்றான்.

10. முதிர்வயதினால் இஸ்ரவேலின் கண்கள் மங்கலாயிருந்தபடியால், அவன் நன்றாய்ப் பார்க்கக் கூடாதிருந்தது. அவர்களை அவனண்டையிலே சேரப்பண்ணினான்; அப்பொழுது அவன் அவர்களை முத்தஞ்செய்து அணைத்துக்கொண்டான்.

11. இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: உன் முகத்தைக் காண்பேன் என்று நான்

நினைக்கவில்லை; ஆனாலும், இதோ, உன் சந்ததியையும் காணும்படி தேவன் எனக்கு அருள் செய்தார் என்றான்.

12. அப்பொழுது அவனுடைய முழங்கால்கள் நடுவே இருந்த பிள்ளைகளை யோசேப்பு பின்னிடப்பண்ணி, அவனுடைய முகத்துக்கு முன்பாகத் தரைமட்டும் குனிந்து வணங்கினான்.

13. பின்பு, யோசேப்பு அவ்விருவரையும் கொண்டுவந்து, எப்பிராயீமைத் தன் வலது கையினாலே இஸ்ரவேலின் இடது கைக்கு நேராகவும், மனாசேயைத் தன் இடதுகையினாலே இஸ்ரவேலின் வலதுகைக்கு நேராகவும் விட்டான்.

14. அப்பொழுது இஸ்ரவேல், மனமறிய, தன் வலதுகையை நீட்டி, இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும், மனாசே மூத்தவனாயிருந்தும், தன் இடதுகையை மனாசேயுடைய தலையின்மேலும் வைத்தான்.

15. அவன் யோசேப்பை ஆசீர்வதித்து: என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவனும், நான் பிறந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த தேவனும்,

16. எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர் இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக, என்பேரும் என் பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களின் பேரும் இவர்களுக்கு இடப்படக்கடவது; பூமியில் இவர்கள் மிகுதியாய்ப் பெருகக்கடவர்கள் என்றான்.

17. தகப்பன் தன் வலதுகையை எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்ததை யோசேப்பு கண்டு, அது தனக்குப் பிரியமில்லாதபடியால், எப்பிராயீமுடைய தலையின்மேல் இருந்த தன் தகப்பனுடைய கையை மனாசேயினுடைய தலையின்மேல் வைக்கும்படிக்கு எடுத்து:

18. என் தகப்பனே, அப்படியல்ல, இவன் மூத்தவன், இவனுடைய தலையின்மேல் உம்முடைய வலதுகையை வைக்கவேண்டும் என்றான்.

19. அவன் தகப்பனோ தடுத்து: அது எனக்குத் தெரியும், என் மகனே, எனக்குத் தெரியும்; இவனும் ஒரு ஜனக்கூட்டமாவான், இவனும் பெருகுவான்; இவனுடைய தம்பியோ இவனிலும் அதிகமாய்ப் பெருகுவான்; அவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள் என்றான்.

20. இவ்விதமாக அவன் அன்றைத்தினம் அவர்களை ஆசீர்வதித்து: தேவன் உன்னை எப்பிராயீமைப்போலவும் மனாசேயைப்போலவும் ஆக்குவாராக என்று இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்துவார்கள் என்று சொல்லி, எப்பிராயீமை மனாசேக்கு முன்னே வைத்தான்.

## தியானம்

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

யாக்கோபு தனது கடைசி நாட்களில் இறுதி காரியங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார். தன்னை எகிப்தில் அடக்கம் செய்யாமல் வாக்களித்த தேசத்திலே அடக்கம் செய்யும்படியாக யோசேப்பிடம் அவர் முன்பே பொருத்தனை வாங்கியிருந்தார் (ஆதி. 47:27-31). இப்போது, அவர் தன் பிள்ளைகள் மீது தன் ஆசீர்வாதங்களைக் கூற இருக்கிறார், யோசேப்பிடத்தில் தொடங்கி, பிறகு அவனின் பிள்ளைகள் மீதும். ஆனால் முதலில், லூஸ் (பெத்தேல் - ஆதி. 35) என்னும் இடத்தில் தேவன் அவருக்கு வாக்களித்ததையும் அவரது உண்மைத்துவத்தையும் யாக்கோபு நினைவுகூருகிறார். அவர் யோசேப்பின் இரு குமாரர்களையும் தன்னுடையவர்களாக உறுதிசெய்து, தனது முதல் காதலாகிய ராகேலை அடக்கம் செய்த இடத்தை நினைவுகூருகிறார்.

குடும்பத்தை அவமதித்த ரூபனுக்குப் பதிலாக இப்போது யோசேப்பு முதற்பேறான குமாரனாக தேர்வுசெய்யப்படுகிறார் (ஆதி. 35). பிறகு யாக்கோபு, யோசேப்பின் இரு குமாரர்களும் சிமியோன் மற்றும் லேவியின் "இரண்டாவது மற்றும் மூன்றாவது" இடத்தை எடுத்துக்கொள்வார்கள் என்று அறிவிக்கிறார். சிமியோனும் லேவியும் கூட தன் குடும்பத்தை அவமதித்துள்ளனர் (ஆதி. 34). யோசேப்பின் இரு குமாரர்களையும் (மனாசே மற்றும் எப்பிராயீம்) ஆசீர்வதிக்கும் வேளையில், யாக்கோபு அவர்களை 'மாற்றுகிறார்' - இளையவனை மூத்தவனுக்கு மேலாக விரும்புகிறார். இந்தக் காரியம் ஆதியாகமம் புஸ்தகத்தில் ஒரு மாதிரி போல, அந்தக் காலத்திற்கும் பாரம்பரியத்திற்கும் மாறாக காணப்படுகிறது; காயினுக்குப் பதிலாக ஆபேல், இஸ்மவேலுக்குப் பதிலாக ஈசாக்கு, ஏசாவுக்குப் பதிலாக யாக்கோபு, லேயாவுக்குப் பதிலாக ராகேல், ரூபனுக்குப் பதிலாக யோசேப்பு மற்றும் இப்பொழுது மனாசேக்குப் பதிலாக எப்பிராயீமும் பிரியப்பட்டு தேர்ந்தெடுக்கப் பட்டனர். யோசேப்பு இந்த சூழ்நிலையை மாற்ற முயல்தலும் கூடாததாக ஆகிறது. யாக்கோபு எப்பிராயீமைதான் மூத்தவனாக பேரிட்டு ஆசீர்வதிக்கிறார். யோசேப்பு மனாசேயை யாக்கோபின் வலது கரம் ஆசீர்வாதத்தைப் பெறும்படியாக நிறுத்தியிருந்தான், ஆனாலும் யாக்கோபு தான் என்ன செய்கிறார் என அறிந்தே செய்கிறார். முப்பதாம் வசனத்தில் இரு குமாரர்களும் ஆசீர்வதிக்கபட்டு, அவர்களின் சந்ததியும் ஆசீர்வதிக்கபட்டு இஸ்ரவேலில் வலுவான தலைவர்களாக ஆனார்களென்று நாம் வாசிக்கிறோம்.

நம் தேவன் மெய்யாகவே எல் எமுனா, என்றும் உண்மையுள்ள தேவன். நாம் உண்மையில்லாத போதிலும், உண்மையுள்ளவராய் இருப்பது அவரின் குணாதிசயத்தில் உள்ளது. நமது திட்டங்களும் செயல்களும் அவரின் உண்மைத்துவத்தை மாற்றாது. எபிரேயர் 6:18, அவர் மாறாதவர் என்றும் பொய்

## 2018 லெந்துகால அனுதின தியானம்
## கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்

சொல்கிறவரில்லை என்றும் - அவர் நமக்கு வாக்களித்ததை செய்வார், என்றென்றும் உண்மையுள்ளவராகவே இருப்பார் என்றும் சொல்லுகிறது. அவரின் வாக்குத்தத்தங்களும் தன் ஜனத்திற்கு அளித்த வார்த்தையையும் அவர் மாற்றவோ திரும்ப எடுக்கவோ மாட்டார். ஏறக்குறைய 277 தடவைகள் தேவன் தன் ஜனங்களோடு உடன்படிக்கை செய்ததாக வேதாகமம் சொல்லுகிறது. தேவன் வாக்களித்தால் அது நிச்சயமாகவே நிறைவேறும். பவுல் இதை நன்றாக அறிந்து, 1 தெசலோனிக்கேயர் 5:24-ல் இப்படியாக கூறியுள்ளார் - "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்".

### ஜெபம்

தேவனே, நீர் எப்பொழுதும் சதாகாலங்களிலும் உண்மையுள்ளவர் என்று நான் உணரும்படி உதவிசெய்திடும். நீர் எல் எமுனா, எப்பொழுதும் உண்மையுள்ளவரும் உண்மைத்துவமென்பது உமது குணாதிசயத்தில் உள்ளது. எக்காலத்திலும் நான் உம்மை நம்ப உதவிடும். நானும் உண்மையாயிருக்க உதவிடும். நான் இந்த சமுதாயத்திற்கும் என்னை சுற்றி இருப்பவர்களுக்கும் ஒரு சாட்சியாய் விளங்க நான் கையிட்டு செய்கிற காரியங்களில் உண்மையாய் இருக்க எனக்கு உதவிசெய்யும். மற்றவர்கள் உம்மை என்னில் கண்டு நீர் எவ்வளவு நல்லவரும் அற்புதமானவரும் என்று அறிந்து அவர்களும் உமது அன்பில் கிட்டி சேரும்படியாய் ஜெபிக்கிறேன். யேசுவாவின் நாமத்தில், ஆமென்.

### செயல்

கர்த்தரை நம்புங்கள், ஏனினில் அவரே உண்மையுள்ளவர். அவர் நம்மை விட்டுவிலகுவதுமில்லை கைவிடுவதுமில்லை என்று வாக்களித்திருக்கிறார் (உபாகமம் 31:6). எக்காலத்திலும் உண்மையுள்ள தேவனின் ஜனமாக நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து, நமக்கு தேவையானவற்றிலும் நாம் செய்ய விரும்பும் அனைத்திலும் நம்மை வழிநடத்தவும், காக்கவும் அவருக்கு விட்டுக்கொடுப்போம், அவரின் நாமத்தின் மகிமைக்காக.

*அருட்திரு ஆண்ட்ரூ ஷி*
*பொறுப்பிப்பிலுள்ள ஆசாரி*
*செயின்ட் ஜேம்ஸ் சர்ச், கோலா பெலேட் மற்றும் செயிண்ட் மார்கரெட் சர்ச், சீரியா*
*குசிங்கின் மறைமாவட்டம் (சரவாக் மற்றும் புருணை டருசலம்)*

## 2018 லெந்துகால அனுதின தியானம்
## கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்

தேதி: 7 மார்ச் - லெந்தின் மூன்றாவது வாரத்தின் புதன்கிழமை
தலைப்பு: நான் எப்பொழுதும் அவருக்கு பிரியமான காரியங்களே செய்கிறேன்
வேதப்பகுதி: யோவான் 8:12-30

12. மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.

13. அப்பொழுது பரிசேயர் அவரை நோக்கி: உன்னைக் குறித்து நீயே சாட்சிகொடுக்கிறாய்; உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல என்றார்கள்.

14. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைக்குறித்து நானே சாட்சிகொடுத்தாலும், என் சாட்சி உண்மையாயிருக்கிறது; ஏனெனில் நான் எங்கேயிருந்து வந்தேனென்றும், எங்கே போகிறேனென்றும் அறிந்திருக்கிறேன்; நீங்களோ நான் எங்கேயிருந்து வருகிறேனென்றும், எங்கே போகிறேனென்றும் அறியீர்கள்.

15. நீங்கள் மாம்சத்துச்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள், நான் ஒருவனையும் நியாயந்தீர்க்கிறதில்லை;

16. நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும்; ஏனெனில் நான் தனித்திருக்கவில்லை, நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம்.

17. இரண்டுபேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே.

18. நான் என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவனாயிருக்கிறேன், என்னை அனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறார் என்றார்.

19. அப்பொழுது அவர்கள்: உம்முடைய பிதா எங்கே என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்; நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள் என்றார்.

20. தேவாலயத்திலே இயேசு உபதேசம்பண்ணுகிறபோது, தருமப்பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வசனங்களைச் சொன்னார். அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை.

21. இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நான் போகிறேன், நீங்கள் என்னைத் தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்றார்.

22. அப்பொழுது யூதர்கள்: நான்போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்கிறானே; தன்னைத்தான் கொலைசெய்துகொள்ளுவானோ என்று பேசிக்கொண்டார்கள்.

## 2018 லெந்துகால அனுதின தியானம்
### கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்

23. அவர் அவர்களை நோக்கி: நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள், நான் உயர்விலிருந்துண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல.

24. ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.

25. அதற்கு அவர்கள்: நீர் யார் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர்தான்.

26. உங்களைக்குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு. என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்; நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன் என்றார்.

27. பிதாவைக்குறித்துப் பேசினாரென்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.

28. ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என்சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.

29. என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை என்றார்.

30. இவைகளை அவர் சொல்லுகையில், அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

**தியானம்**

“பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்” (யோவான் 8:29).

சிலர் யோசிக்கலாம், "அவர் இயேசு. நிச்சயமாக அப்படி சொல்லலாம். அதில் ஒரு ஐயமுமில்லை. ஆனால் நானும் அந்த உயரமான பரிபூரண நிலையை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கக் கூடாது." இவ்வாறு சொல்வது ஒரு சரியான பதிலாகுமா?

மனித வாழ்வின் கடுமையான யதார்த்தத்தில் வாழும் ஒரு தனிப்பட்ட நபராக, அவருடைய வாழ்க்கை எவ்வாறு இந்தக் காலக்கட்டத்தில் வாழவேண்டும் என்பதை நமக்கு காண்பிக்கிறது. “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்”

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

(யோவான் 8:12) என்று இயேசு தெளிவாக பரிசேயர்களுடன் கொள்ளும் இந்த குறிப்பான சந்திப்பின் துவக்கத்தில் விளக்கப்படுத்துகிறார். “எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்” (கொலோ. 3:23) என அப்போஸ்தலர் பவுல் இதை வலியுறுத்துகிறார்.

அந்த ஒளியின் மைய நோக்கம் என்னவென்றால், நாம் இயேசுவுடன் நடக்கும்போது அந்த பாதையானது பிதாவிடம் வழிநடத்துகிறது. இயேசு நம்மை திருத்துவமாகிய தேவனாகிய பிதாவிடம் கிட்டி சேர்த்து, அவருடன் இன்னும் ஒரு ஆழமான நெருக்கத்தில் நம்மை நடத்துகிறார். ஆனால் இயேசுவிடமே இது ஆரம்பமாகிறது: அவரை அறிவது பிதாவை அறிவதாகும் (வச. 19).

இயேசுவிடம் ஆரம்பமாகும் தேவனை அறியும் அறிவு, ஒரு தகவல் மாத்திரம் அல்ல. ஒரு நபரை அறியும் வகையில் ஒரு உறவு சார்ந்தது. இத்தகைய தனிப்பட்ட அறிவு நிலைமாற்றத்தில் முடிவடைகிறது, காரணம், அவர் மீது நம் அன்பு பெருகையில் அவரைப் போலவே இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம் (2 கொரி. 3:18).

இந்த மறுரூபமானது படிப்படியாக பரிபூரணத்திற்குள் முன்னேறி இறுதியாக அவர் வெளிப்படும்போது பூரணப்படும் (1 யோவான் 3:2). தற்போது நாம் எப்பொழுதும் அவருக்கு பிரியமானதை செய்ய பிரியப்படமாட்டோம். அவருக்கு பிரியமில்லாததையும் நாம் சில வேளைகளில் செய்வதுண்டு. ஆனால் ஒரு நாள் வரும், அந்த நாளில் நாம் எப்போதும் அவருக்கு பிரியமானதையே செய்திடுவோம்.

**ஜெபம்**

தேவனே, மூன்று காரியங்களுக்காக ஜெபிக்கிறேன்: உம்மை இன்னும் தெளிவாகப் பார்க்க வேண்டும், உம்மில் இன்னும் அதிகமாக அன்புகூர வேண்டும், உம்மை இன்னும் நெருக்கமாகப் பின்தொடர வேண்டும். ஆமென்.

**செயல்**

எப்போதும் நீங்கள் விளக்கைத் தட்டும்போது, (அறையில், வாகனத்தில் அல்லது கைப்பிடி விளக்கு) முடிந்தால் சற்று நேரமெடுத்து, இயேசுவும் அவ்வாரே உங்கள் வாழ்க்கையிலும் செய்கிறார் என்று நிதானித்திருங்கள்.

*பேராயர் எமெரிட்டஸ் டாக்டர் வீ பூன் ஃஉப்*
*மெத்தடிஸ்ட் தேவாலயம் சிங்கப்பூர்*

## 2018 லெந்துகால அனுதின தியானம்
## கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்

தேதி: 8 மார்ச் - லெந்தின் மூன்றாவது வாரத்தின் வியாழக்கிழமை
தலைப்பு: ஆபிரகாம், மெல்கிசேதேக்கிற்கு பத்தில் ஒரு பங்கைப் பகிர்ந்தளித்தார்
வேதப்பகுதி: எபிரெயர் 7:1-10

1. இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்.

2. இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்; இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அருத்தமாம்.

3. இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.

4. இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான்.

5. லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் அரையிலிருந்து வந்த தங்கள் சகோதரரான ஜனங்களின் கையிலே நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளைபெற்றிருக்கிறார்கள்.

6. ஆகிலும், அவர்களுடைய வம்ச வரிசையில் வராதவனாகிய இவன் ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான்.

7. சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான், அதற்குச் சந்தேகமில்லை.

8. அன்றியும், இங்கே, மரிக்கிற மனுஷர்கள் தசமபாகம் வாங்குகிறார்கள்; அங்கேயோ, பிழைத்திருக்கிறான் என்று சாட்சிபெற்றவன் வாங்கினான்.

9. அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால்,

10. தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்.

### தியானம்

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

இந்தப் பகுதி இயேசுவின் ஆசாரியத்துவம் மெல்கிசேதேக்கிற்கு ஒப்பாக இருக்கின்றது எனக் கூறி, மீதி இருக்கும் ஏழாம் அதிகாரத்துக்கு அறிமுகமாக இருக்கிறது. ஆனால் அங்கு செல்வதற்கு முன், நாம் மெல்கிசேதேக்கை உற்று கவனிக்க வேண்டும்.

இது ஆச்சரியமானதாக தோன்றலாம், ஆனால் மெல்கிசேதேக் பற்றிய இந்த பத்தியில் அவரைப்பற்றி ஒரு எளிமையான குறிப்பு உள்ளது: அவரின் ஆசாரியத்துவத்தை எங்கு பெற்றார் என்று யாரும் அறிந்திருக்கவில்லை. மெல்கிசேதேக்கின் தகப்பன், தாய் அல்லது குடும்பத்திலிருந்தே அவருடைய ஆசாரியத்துவத்தை வாரிசாகக் கொண்டிருக்கவில்லை. அவருடைய ஆசாரியத்துவத்தைப் பிறப்புடன் தொடங்கி மரணத்தில் முடிவுக்குக் கொண்டுவருவதையும் எங்கும் விவரிக்கவில்லை. இதைதான் மூன்றாம் வசனம் அடிப்படையில் இப்படி சொல்லுகிறது.

மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் லேவிய ஆசாரியத்துவத்தை விட மேன்மையானது என்று இது சுட்டிக் காட்டுகிறது. மெல்கிசேதேக் ஆபிரகாமுக்கு ஒரு பிரதான ஆசாரியாக இருக்கிறார், ஏனென்றால் ஆபிரகாம் "எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பங்கை" மெல்கிசேதேக்கிற்கு கொடுத்தார்; "கொள்ளையிடப்பட்ட பொருள்களில் பத்தில் ஒரு பங்கு" மெல்கிசேதேக்கிற்கு வழங்கப்பட்டது. அவர் லேவிக்கும் மேலானவர், காரணம் லேவி ஆபிரகாமிலிருந்து வந்திருந்தார்.

ஆனால் மெல்கிசேதேக் ஒரு அரசர் (அவருடைய பெயரின் அர்த்தம் "நீதியின் ராஜா" என்று பொருள்) என்று 2-ம் வசனம் தெளிவாக விளக்குகிறது. இஸ்ரவேல் ராஜாக்கள் யூதாவின் வழியிலிருந்து வருகிறார்கள், லேவியிடமிருந்து அல்ல. ஒரு ராஜா எப்படி ஒரு ஆசாரியராகவும் இருக்க முடியும்?

நிச்சயமாக நாம் முடிவை அறிந்திருக்கிறோம்: இயேசு நம்முடைய ராஜாவும் ஆசாரியனுமானவர், அவர் எந்த லேவியனையும் விட மிக உயர்ந்த ஆசாரியராவார். இயேசுவே உண்மையான ஆசாரியராவர், அவர் எந்த ஆசாரியரிடமிருந்தும் தம் ஆசாரியத்துவத்தைச் சுதந்தரிக்கவில்லை. அவரே நம் நித்திய ஆசாரியராக இருக்கிறார், அவருடைய ஆசாரியத்துவம் ஒரு பிறப்புடன் ஆரம்பமாகவுமில்லை மரணத்தினாலும் முடிவதுமில்லை. அவருடைய ஆசாரியத்துவம் எப்படி முடிவில்லாமல் இருக்கிறதோ, அதேபோல அவருடைய உண்மைத்துவமும் இருக்கிறது.

இப்பேர்ப்பட்ட ஓர் ராஜ ஆசாரியருடன் என்ன செய்வோம்?

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

நம்முடைய முழு விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அவர் மீது வைக்க வேண்டும். அவரைவிட பாத்திரவான் யாருமில்லை. நாம் எப்பொழுதும் நம்பிக்கையுடனும் ஆறுதலுக்காக பேசக்கூடிய ஆசாரியாக இயேசு இருக்கிறார். நாம் எப்பொழுதும் நமது ராஜாவாகிய அவரின் வல்லமையின்மேல் நம்பிக்கை வைத்து அவரின் உண்மைத்துவத்தை சார்ந்து இருக்கலாம்.

ஏதாவது உங்கள் இருதயத்தில் பாரமாக இருக்கிறதா? சில பிரச்சனைகள் அல்லது நீங்கள் அறிக்கை செய்ய வேண்டிய ரகசிய பாவம் உள்ளதா? அதை இயேசுவிடம் கொண்டுவாருங்கள். அவருடன் பேசுங்கள். உங்கள் ராஜாவாக அவரை முழுமனதுடன் சேவியுங்கள். உங்கள் எதிர்காலம் மாறுவதை நீங்கள் காண்பீர்கள்.

**ஜெபம்**

அன்பான இயேசுவே பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை. நீரே என் ராஜாவும் ஆசாரியருமாய் இருக்கிறீர். உமது ஊழியக்காரனாக இருக்க உமது அடியேனுக்கு கற்றுத்தாரும். உம்மிடம் வழக்கமாக காரியங்களைப் பகிர்ந்து கொள்ளவும் என்னை பழக்குவியும். எனது எதிர்காலம் உமது கரங்களில் இருக்கிறது என நான் இன்னும் அதிகமாய் உணர்ந்து உம்மீது நம்பிக்கை வைக்க உதவிடும். நான் வழி விலகி போகும்போதும் விழுந்து போகும்போதும் என்னை தயவாய் உம்மிடம் கூட்டி சேர்த்துக் கொள்ளும்.

**செயல்**

இன்று (ஒரு ரகசியமான மறைந்திருக்கும் அல்லது ஓர் விட்டுவிடமுடியாத) பாவத்தை இயேசுவிடம் அறிக்கைசெய்து அவரின் உதவியினால் நீங்கள் மாற்றமுடியும் என அறிந்து அவரின் தயவை நாடுங்கள்.

*அருட்திரு முனைவர் சியாங் மிங் ஷன்*
*விரிவுரையாளர்*
*திரித்துவ இறையியல் கல்லூரி*

## 2018 லெந்துகால அனுதின தியானம்
## கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்

தேதி: 9 மார்ச் - லெந்தின் மூன்றாவது வாரத்தின் வெள்ளிக்கிழமை
தலைப்பு: நீங்கள் வார்த்தைகளை எடுத்து, கர்த்தரிடத்தில் திரும்புங்கள்
வேதப்பகுதி: ஓசியா 14:1-9

1. இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு; நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய்.

2. வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவரை நோக்கி: தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்.

3. அசீரியா எங்களை இரட்சிப்பதில்லை; நாங்கள் குதிரைகளின்மேல் ஏறமாட்டோம்; எங்கள் கைகளின் கிரியையைப்பார்த்து: நீங்கள் எங்கள் தேவர்களென்று இனிச் சொல்லமாட்டோம்; திக்கற்றவன் உம்மிடத்தில் இரக்கம்பெறுகிறான் என்று சொல்லுங்கள்.

4. நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களைவிட்டு நீங்கிற்று.

5. நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்; அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான்; லீபனோனைப்போல் வேரூன்றி நிற்பான்.

6. அவன் கிளைகள் ஓங்கிப் படரும், அவன் அலங்காரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப்போலவும், அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப்போலவும் இருக்கும்.

7. அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள்; தானிய விளைச்சலைப்போலச் செழித்து, திராட்சச்செடிகளைப்போலப் படருவார்கள்; அவன் வாசனை லீபனோனுடைய திராட்சரசத்தின் வாசனையைப்போல இருக்கும்.

8. இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன என்று எப்பிராயீம் சொல்லுவான்; நான் அவனுக்குச் செவிகொடுத்து, அவன்மேல் நோக்கமாயிருந்தேன்; நான் பச்சையான தேவதாரு விருட்சம்போலிருக்கிறேன்; என்னாலே உன் கனியுண்டாயிற்று என்று எப்பிராயீம் சொல்லுவான்.

9. இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க புத்தியுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்; பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்.

### தியானம்

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

வாழ்க்கை என்பது கர்த்தரின் ஜனங்களுக்கு ஒரு விசுவாச பிரயாணமாகும். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறவர் இயேசுவே. நாம் கிறிஸ்துவுடன் ஆரம்பித்து கிறிஸ்துவுடன் முடிக்கவேண்டும். ஆனாலும் இது ஒரு சுலபமான பிரயாணமல்ல. அது சோதனைகளும் உபத்தரவங்களும் நிறைந்த ஒரு சவாலான பாதையாக உள்ளது. சில தேவ ஜனங்கள் அவரில் ஆரம்பித்தாலும் அவரில் முடிக்கவில்லை. அவர்கள் அடிக்கடி தடுமாறி திசைமாறி அழுத்தத்திற்கு இடம் கொடுத்துவிடுகிறார்கள்.

**<u>தேவ ஜனத்திற்கு ஓர் எச்சரிக்கை</u>**

இஸ்ரவேல் தன் அக்கிரமத்தினால் தடுமாறி விழுந்தது (ஓசியா 14:1). அவர்கள் தங்கள் விசுவாசத்திலிருந்து விலகி, அந்நிய தேவர்களை வழிபடும் அசீரியர்களோடு ஒரு அரசியல் கூட்டணியை அமைத்தனர். எகிப்தின் குதிரைகள் அவர்களின் ராணுவத்தை வலுமைப்படுத்துமென்று அவர்கள் குதிரைகள்மீது நம்பிக்கைவைத்தனர் (சங்கீதம் 20:7). சிருஷ்டிகரை நிராகரித்து தங்கள் கைவேலையினால் உருவாக்கப்பட்ட விக்கிரகங்களை நம்பினார்கள். கானானிய விக்கிரகங்களை கருவுறுதலுக்காக வணங்கினர். கர்த்தரின் வாக்குத்தத்தங்களும் நியாயப்பிரமாணங்களையும் முற்றிலும் மறந்தனர். விசுவாச துரோகம் தேவனை விட்டு விலகி தடமாறச்செய்தது. தேவனிடத்திற்கு திரும்புவதற்கு அந்த வீழ்ச்சி மிக மோசமாகவும் திரும்பக்கூடாதபடியாகவும் இருந்தது. கர்த்தரின் உடன்படிக்கைக்குரிய ஜனங்கள் இரக்கத்தைத் தேடி அலையும் அனாதைகளைப்போல் தோன்றினார்கள் (வச. 3). அவர்களின் பெலனற்ற பாதிக்கப்படக்கூடிய நிலைமை நம் எல்லோருக்கும் ஒரு எச்சரிக்கையாகும்.

**<u>திரும்பும்படியாக ஓர் அழைப்பு</u>**

“இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்" என்பதே தனது வார்த்தைக்கு செவிசாய்க்கும்படியாக கர்த்தரிடமிருந்து மீண்டும் வருகிற ஒரு அழைப்பாக இருந்தது. தேவன் அவர்களை கைகழுவி விடவில்லை என்பது ஆறுதலாக இருக்கிறது. அவர் நீட்டப்பட்டக் கரத்துடனே அங்கு இருந்தார். அவர் கரம் குறுகிப் போகவில்லை. அவர் மீட்டெடுக்க முறைப்பட்டார். தன் ஜனங்கள் தம்மிடம் திரும்பவேண்டுமென தேவன் விரும்பினார். சிருஷ்டிகராகிய தேவனிடம் திரும்புவதைவிட வேறொரு வழியுமில்லை. அதுவே உகந்த செயலாகும்.

நம் தேவன் தயாள குணம் கொண்டவர். அவரின் அழைப்பு அவரின் அன்பையும் மன்னிப்புத் தன்மையையும் அடிப்படையாக சார்ந்தது. "நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்," எந்த ஒரு நிலையும்

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

தேவனின் அன்பிற்கும் தயவுக்கும் அப்பாற்பட்டதில்லை. தேவனின் கிருபையும் இரக்கமும் மிக மோசமானப் பாவிகளுக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது.

**<u>கீழ்ப்படிதலின் பின்விளைவுகள்</u>**

தேவனிடத்தில் திரும்பும்போது நாம் சீர்படுவதற்கு இடம் வகுக்கிறது. நம் தேவனே மறுசீர்படுத்துவதில் எஜமானர். அவர் எத்தனிக்கும் நோக்கங்கள் அவரின் சீரமைப்பின்போது மாறாது. இதுவே தேவனின் மறுசீரமைப்பின் அழகு. அவர்கள் மெய்யான தேவனை தொழுதுகொள்ள திரும்பியுள்ளனர். "நாங்கள் எங்கள் உதடுகளின் பலிகளைச் செலுத்துவோம்". அவர்கள் பெலப்படுத்தப்பட்ட ஜனங்களாக நிற்கிறார்கள். தேவன் அவர்களை அனுதினமும் பெலப்படுத்துகிறார் (14:5-6). அவர்களின் பெலத்தின் ரகசியம் “அந்தப் பனியாகிய” தேவனே. தேவனின் நிழலில் அவர் ஜனங்கள் வேர்பிடித்து, முளைத்து, மலர்ந்து மீண்டும் லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வலுவாக வளர்வார்கள். "நான் பச்சையான தேவதாரு விருட்சம்போலிருக்கிறேன்; என்னாலே உன் கனியுண்டாயிற்று" எனும் வசனங்களை கவனியுங்கள். தேவனிடத்தில் என்ன ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட மகத்துவமான நம்பிக்கை. அவர்கள் “ஒலிவ மரத்தைப்போலவும்… தானியத்தைப்போலவும்… திராட்சை செடியைப்போலவும்…” கனியுள்ள ஜனங்களாக ஆனார்கள். தேவனோடு ஓர் நெருக்கமான உறவுக்குள் திரும்பியபோது அவரின் ஜனங்கள் வளமாகவும், பயனுள்ளவர்களாகவும், கனியுள்ளவர்களாகவும், வலுமையாகவும், நிலையானவர்களாகவும் ஆனார்கள். அதுவே தேவனின் மறுசீர்படுத்தும் வல்லமை.

**ஜெபம்**

கிருபையுள்ள தேவனே எங்களின் வீழ்ச்சிகளின்போது எங்களை கைவிடாதிருந்ததற்காய் ஸ்தோத்திரம்.
எங்கள் தோல்விகளைக் கண்டுகொள்ள எங்களை உணர்வடையச்செய்யும்.
உம்மிடம் துரிதமாய் திரும்புவதற்கு எங்களுக்கு நம்பிக்கையைத் தாரும்.
உம்முடைய நோக்கங்களுக்கு எங்களை திரும்பச்செய்து நாம் உம்முடனே நீதியின் பாதையில் நடக்கச் செய்திடும்.

**செயல்**

தேவனின் வார்த்தையின் வெளிச்சத்தின்படி நாம் கர்த்தருக்குள் எவ்வாறு நடக்கிறோமென்று ஆராய்ந்து பார்ப்போம்.

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

சங்கீதக்காரனோடு நாம் ஜெபிப்போம், "தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்".
நாம் தேவனுடைய வார்த்தைக்கு ஓர் நொறுங்குண்ட இருதயத்தோடு செயல்படுவோம்.
தேவனிடத்தில் திரும்பி அவரை சேவிப்போம்.

*அருட்திரு ரங்கநாதன் பிரபு*
*போதகர்*
*சிங்கப்பூர் மெத்தடிஸ்ட் தேவாலயம்*

## 2018 லெந்துகால அனுதின தியானம்
## கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்

தேதி: 10 மார்ச் - லெந்தின் மூன்றாவது வாரத்தின் சனிக்கிழமை
தலைப்பு: தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்
வேதப்பகுதி: எபேசியர் 6:10-20

10. கடைசியாக, என் சகோதரரே, **கர்த்தரிலும்** அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.

11. நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.

12. ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

13. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

14. சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்;

15. சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்,

16. பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

17. இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

18. எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.

19. சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக,

20. நான் தைரியமாய் என் வாயைத்திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்கு கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள்.

### தியானம்

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

கடந்த காலங்களில் ரோமானிய சாம்ராஜ்யத்தை எதிரிகளிடமிருந்து தாக்குதல்களை எதிர்த்து காவல்காக்கும்படியாக ரோம வீரர்கள் பல்வேறு கோபுரங்கள் மற்றும் கோட்டைகளில் காவல்காக்கும்படி நியமிக்கப்பட்டார்கள். தாக்குதல்கள் நேரிடும்போது போர்வீரர்கள் தங்களது பொறுப்பில் நின்று தற்காக்க வேண்டியதாய் இருந்தது. தங்கள் பதவி பொறுப்புகளை அவர்கள் விட்டு ஓடிவிட கூடாது. அப்படி தங்களது காவல் பொறுப்புகளிருந்து ஓடி பிறகு அகப்பட்டால் விட்டு ஓடியதற்கு தூக்கிலிடப்படுவர். அப்போஸ்தலர் பவுலும் கிறிஸ்தவர்களை அவ்வாறு இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் எதிர்த்து நிற்க கூறியுள்ளார்.

ஆவிக்குரிய போராட்டம் என்பது கடந்த காலத்திலும் இன்றைய காலத்திலும் மிக நிஜமான ஒன்று. சாத்தான் அவனது பெருமையினிமித்தமும் தேவனுடைய இடத்தைக் கைப்பற்றவேண்டுமென எத்தனித்ததற்காக பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான் (வெளிப்படுதல் விசேஷம் 12). அவனின் முரட்டாட்டத்தை முன்னிட்டு மூன்றில் ஒரு பங்கு தேவதூதர்களை வஞ்சித்து கூட்டிக்கொன்டு போனான். இப்பொழுது அவனின் தாக்குதல்களின் குறி பூலோகத்தில் உள்ள கிறிஸ்தவர்களே.

நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை அணிந்தால்தான் கர்த்தருக்குள் உறுதியாய் நிற்கமுடியும். பிசாசு நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்துபவனும் பொய்களின் தகப்பனுமாய் இருந்து மனசாட்சிகளை குறிவைத்து கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை தனிப்பட்ட விதத்திலும் ஒருவருக்கு ஒருவர் விரோதமாகவும் குலைக்கிறவனுமாய் இருக்கிறான். அவன் தேவனுடைய நன்மையையும் அவர் நம்மிடம் கொடுத்த வார்த்தையையும் கேள்விகேட்க வைத்துவிடுவான். கிறிஸ்து ஏற்கனவே பிசாசையும் அவனது பொல்லாதக் கிரியைகளையும் அவரின் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் திட்டவட்டமாய் மேற்கொண்டுவிட்டார். அவரின் நீதி விசுவாசத்தினிமித்தமே நம் நீதியாயிற்று. நம்மில் அன்புகூர்ந்தவரினாலே நாம் முற்றிலும் ஜெயம்கொள்பவர்களாய் ஆனோம். ஆனபடியாலே நாம் தேவனின் சர்வாயுதவர்க்கத்தை அணிந்து, விசுவாசத்தில் தரித்திருந்து, கிறிஸ்துவின் ரத்தம் நம் குற்ற உணர்வுகளை சுத்திகரித்தது என நம்பலாம். தேவனின் உண்மையிலும் அவரின் வார்த்தையிலும் நாம் உறுதியாய் நிலைநிற்கலாம். கர்த்தருடைய வார்த்தை சதாகாலங்களிலும் நிலைநிற்கும்.

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

ஆவிக்குரியப் போராட்டத்தின் மத்தியில் இயேசு நமக்காய் இவ்வாறு யோவான் 17:11-15ல் ஜெபித்ததையும் நினைவுகூருகிறோம்: ***பரிசுத்த பிதாவே, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.*** பிசாசையும் அவனின் துரைத்தனங்களோடும் எதிர்த்து நிற்கும் ஒரு பங்காக, ஆண்டவரின் ஜெபம் மற்றும் இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பதன் மூலமாய் அவரோடு திறப்பிலிருந்து நம் மீட்புக்காகவும் பாதுகாப்புக்காகவும் சேர்ந்து பரிந்துரைக்கலாம் (யோவான் 17:15).

எப்போதும் விசுவாசத்தில் உறுதியுடன் நிலைத்திருப்பதற்கு கர்த்தர் தம் சமாதானத்தையும் பலத்தையும் நமக்கு வழங்கட்டும். கர்த்தருடைய வார்த்தை என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறது, ஆமென்.

**ஜெபம்**

அன்பான பரலோகத் தகப்பனே, உமது பிள்ளையை பிசாசானவனும் அவனின் பொல்லாத தூதர்களும் கொண்டுவரும் எல்லா ஆவிக்குரிய போராட்டங்களிலிருந்து கிறிஸ்துவின் இரத்தத்தினாலே விலக்கி காத்துக்கொள்ளும். நான் உமது சத்தியத்திலும் வார்த்தையிலும் நிலைத்து நிற்க உதவிடும்.

இதை இயேசுவின் நாமத்தினாலே ஜெபிக்கிறோம்.

**செயல்**

உங்களின் விசுவாசத்தை அழிக்கும்படியாக பிசாசும் அவன் பயன்படுத்தும் மற்றவர்களும் பொய்யான குற்றச்சாட்டுகளையும் உபத்திரவங்களையும் கொண்டுவந்து உங்கள் மீது சுமத்தும்போது, நீங்கள் அதை சந்திக்க உறுதியாய் நில்லுங்கள்.

*அருட்திரு மார்ட்டின் யீ*
*பேராயர் டெர்ரி கீவின் உதவியாளர்*
*சிங்கப்பூர் லூத்தரன் திருச்சபை*

## 2018 லெந்துகால அனுதின தியானம்
## கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்

தேதி: 11 மார்ச் - லெந்தின் மூன்றாவது வாரத்தின் ஞாயிற்றுக்கிழமை
தலைப்பு: கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்
வேதப்பகுதி: ஏசாயா 50:4-11

4. இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச்செய்கிறார்.

5. கர்த்தராகிய ஆண்டவர் என்செவியைத் திறந்தார்; நான் எதிர்க்கவுமில்லை, நான் பின்வாங்கவுமில்லை.

6. அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.

7. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினேன்.

8. என்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார்; என்னோடே வழக்காடுகிறவன் யார்? ஏகமாய் நிற்போமாக, யார் எனக்கு எதிராளி? அவன் என்னிடத்தில் வரட்டும்.

9. இதோ, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? இதோ, அவர்கள் எல்லாரும் ஒரு வஸ்திரத்தைப்போலப் பழசாவார்கள்; பொட்டுப்பூச்சி அவர்களை அரிக்கும்.

10. உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்.

11. இதோ, நெருப்பைக் கொளுத்தி, அக்கினிப்பொறிகளால் சூழப்பட்டிருக்கிற நீங்கள் அனைவரும், உங்கள் அக்கினி தீபத்திலும், நீங்கள் மூட்டின அக்கினிஜுவாலையிலும் நடவுங்கள்; வேதனையில் கிடப்பீர்கள்; என் கரத்தினால் இது உங்களுக்கு உண்டாகும்.

### தியானம்

ஏசாயா 50:4-11, ஏசாயாவில் காணப்படும் நான்கு ஊழியக்காரர் பாடல்களில் ஒன்று (மற்றவை 42:1-4; 49:1-7: 52:13-53:12). இந்த நூல்கள் புதிய ஏற்பாட்டில் மேசியத் தீர்க்கதரிசனங்களாக அடிக்கடி குறிப்பட்டு, இயேசுவை மேசியாவாக ஆதிகால சபையானது சாட்சிகொடுக்கிறது. ஏசாயா 50:4-11-ல், துயரப்படுகிற ஊழியர் முதல்

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

நபர் பெயரில் பேசுகிறார், தற்காலத்தில் உள்ள அவருடைய மக்களுக்கு உதவ, கர்த்தரிடத்தில் வார்த்தைப் பெற்ற ஒரு ஆசிரியராகத் தன்னை அடையாளம் காட்டுகிறார்.

துயரப்படுகிற ஊழியர் எப்படி உதவி செய்கிறார்? துயரப்படுகிற ஊழியர் தனது மக்களை **காப்பாற்றுவதன்** மூலம் உதவுகிறார் (வச. 4). மாற்கு 6:35-ல் இயேசு சொல்லுகிறார்: "நான் ஜீவ அப்பம்; என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்." தேவன் நம் தேவைகள் அனைத்தையும் சந்திப்பதன் மூலம் நமக்கு உதவுகிறார்.

துயரப்படுகிற ஊழியர் **உண்மையுள்ளவராக இருப்பதன்** மூலம் உதவுகிறார் (வச. 5-6). மற்றவர்கள் சார்பாக துன்புறுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டிருந்தாலும், இயேசு உண்மையுடன் நிலைத்திருந்தார். 1 பேதுரு 3:18 கூறுகிறது: "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்..."

துயரப்படுகிற ஊழியர், எதிரிகள் அவரை அவமானப்படுத்தி அழிக்க முயன்றாலும் **நிலைநிறுத்தப்படுவதன்** மூலம் உதவுகிறார் (வச. 7-9). பிலிப்பியர் 2:9 கூறுகிறது, "ஆகையால் தேவன் அவரை உயர்ந்த ஸ்தலத்திற்கு உயர்த்தி, எல்லாப் பெயர்களுக்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார்..." பிதாவாகிய தேவனின் பிரசன்னத்தில், உரிமையிடத்தில் இருக்கும் உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாசிகள் சேவித்து தொழுதுகொள்ளுகிறார்கள்.

10-ம் வசனத்தில், துயரப்படுகிற ஊழியர் செவிகொடுப்பவர்களை நம்ப சொல்லுகிறார். துயரப்படுகிற ஊழியக்காரனை அனுப்புவதன் மூலம் ஆண்டவர் தாமே நமக்கு உதவுகிறார் - நம் ஆதரவாளரும், உண்மையுள்ள மேய்ப்பரும், என்றென்றும் சிருஷ்டிப்பின் மீது ஆளுகைக்கொள்ளும்படி தேவனால் நிலைநிறுத்தப்பட்டவர்!

"நெருப்பைக் கொளுத்துகிறவர்கள்", அதாவது தேவனுக்கு விரோதமாக கலகத்தின் விதைகளை விதைக்கிறவர்களுக்கும் அவருடைய மக்களுக்கு இடையில் தொந்தரவு கொடுப்பவர்களுக்கும் எச்சரிக்கையுடன் இந்த வசனம் முடிவடைகிறது. இத்தகைய மக்கள் வேதனையை அனுபவிப்பார்கள் (வச. 11). நாம் எப்போதும்

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

கடவுளுடனும் மற்றவர்களுடனும் சமாதானத்திற்கும் ஒற்றுமைக்கும் போராடுவதற்கு இது எப்போதும் ஒரு வலிமையான நினைவூட்டல்.

இந்த லெந்து பருவத்தில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆயுட்காலம் மற்றும் ஊழியத்தை நாம் இன்னும் அதிகமாக தியானித்துக் கொண்டாடவேண்டும் - அந்த துயரப்படும் ஊழியக்காரர். அவரே நம்மைக் காப்பவர், உண்மையுள்ள மேய்ப்பன், மற்றும் நம்மை நிலைநிறுத்துபவர். அவர் நம் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அல்லேலூயா!

**ஜெபம்**

ஆண்டவரே, இந்த லெந்து பருவத்தில், உங்கள் குமாரன் இயேசு கிறிஸ்துவின் அன்பையும் என் சார்பாக அவருடைய தொடர்ச்சியான ஊழியத்தையும் நான் நினைவுகூருவேன். என் பாவங்களை மன்னிப்பதற்காக சிலுவையில் அவரது உயிரைக் கொடுத்ததற்காகவும், இயேசுவை பூமியில் அனுப்பியதற்காகவும், அவரை கல்லறையிலிருந்து உயிரோடு எழுப்பினதற்காகவும், நித்தியத்திற்கும் அவரை மறுபடியுமாய் பரலோகத்தில் சேர்த்துக் கொண்டதற்காகவும் நன்றி என்று சொல்லுகிறேன். இயேசுவே காப்பவர், மேய்ப்பர், நிலைநிறுத்தப்பட்ட கர்த்தராய் இருக்கிறார் என்று நான் சற்று தியானிக்கும் போது, நான் இன்னும் அவரை முழுமையாய் நம்புவதற்கு எனக்கு பெலனைக் கொடுத்து உதவிடும் என்று தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். கிறிஸ்துவின் அன்பையும் என் வாழ்வில் அவரின் நம்மையையும் ஓர் நன்றியுணர்வுடன் தினமும் நினைவுகூர எனக்கு உதவிடும். இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன், ஆமென்.

**செயல்**

சமீப காலங்களில் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு சரீரப்பிரகாரமாகவும் உறவுகள் பிரகாரமாகவும் மனரீதியாகவும் மற்றும் ஆவிக்குரியரீதியாகவும் செய்த பற்பலக் காரியங்களை ஓர் பட்டியலிடவும். அவரின் அற்புதமான அக்கறைக்காக நாம் நன்றியுணர்வைத் தெரிவித்துள்ளோமா? எவ்வாறு இந்த ஆசீர்வாதங்களை தேவையான மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளலாம்? நல்ல மேய்ப்பரின் அக்கறையான போஷனத்தை அவரின் ஜனமாகிய நாம் எவ்வாறு வார்த்தைகளினாலும் செயல்பாட்டிலும் வெளிப்படுத்தலாம்? மற்றவர்களிடம் இயேசுவின் “கைகளாகவும் கால்களாகவும்” இருந்திட இன்றே முயற்சி எடுங்கள்.

*லெப்டினன்ட் கர்னல் எட்வர்ட் ஹில்*

**2018 லெந்துகால அனுதின தியானம்**
**கருப்பொருள்: அவரது முடிவில்லா உண்மைத்துவம்**

*தலைமைச் செயலாளர்*
*சால்வேஷன் ஆர்மி*
*சிங்கப்பூர், மலேசியா மற்றும் மியான்மர் மண்டலம்*